1993 மார்ச் 31]

மருத்துவர்கள் வராமல் இருக்கின்ற அந்த இடங்களுக்கு தனியாக அந்த இடத்தையே குறிப்பிட்டு, மருத்துவர்கள் தேவை என்று பத்திரிகைகள் மூலமாக விளம்பரம் செய்து, அதிலே யார் மனு செய்கிறார்களோ அவர்கள் குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் அங்கே தொடர்ச்சியாக பணியாற்ற வேண்டும் என்ற உத்தரவாதத்தைப் பெற்றுக்கொண்டு, இதுபோன்ற இடங்களிலே அவர்களை அமர்த்தலாம் என்ற முடிவை எடுத்திருக்கிறது. ஒரு வேளை அவர்கள் அங்கு தங்கி அங்கே பணியாற்றவில்லை என்றாலோ அல்லது அடிக்கடி விடுமுறையில் போகிறார்கள் என்று சொன்னால், உடனடியாக அவர்கள் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு அடுத்தவர்களைப் போடுவதற்கு ஏதுவாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே இந்தத் திட்டத்தை இப்போது நாம் அமலாக்க இருக்கிறோம். இன்னும் சில நாட்களுக்குள்ளே அதை அமலாக்குவதற்கான நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அப்படி அமலாக்குகிற போது எல்லா இடங்களிலேயும் இந்தப் பிரச்சினை முழுவதுமாக தீர்க்கப்படும் என்று நாங்கள் நம்புகிறோம்.

முற்பகல் 10—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 184, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

184—

நிரந்தரக் கருத்தடைக்குப் பின்னரும் குழந்தை பெற்ற தாய்மார்களின் நிலை.

* 10410—திருமதி கே. மரியம் உல் ஆசியா:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிரந்தரக் கருத்தடை செய்து கொண்ட பின்பும் அது தோல்வியுற்று குழந்தை பெற்ற தாய்மார்களின் நிலையை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த தாய், சேய் நலனைக் காக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நிரந்தரக் கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொண்ட பின்பு அது தோல்வியுற்று குழந்தை பெற்ற தாய் மற்றும் சேய் நலனைக் காக்க அரசு எல்லாவித நடவடிக்கையும்

எடுத்துள்ளது. குடும்பநல அறுவை சிகிச்சை தோல்வியுற்று மறுபடியும் அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் தாய்மார்களுக்கு நஷ்ட ஈடாக ரூ. 100 வழங்குமாறு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இது போன்ற தாய்மார்களுடைய குழந்தைகளுக்குத் தேவையான தடுப்பு ஊசி மற்றும் குழந்தைகள் நலத் திட்ட சேவைகளையும் செய்ய அரசு ஏற்பாடு செய்துள்ளது.

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை தீவிரமாக அமல்படுத்துவதிலே இந்தியாவிலேயே தமிழ் மாநிலம் தான் முதலிடம் வகிக்கிறது. இந்த வேளையில். நிரந்தரமாக குடும்பக் கட்டுப்பாடு கருத்தடை செய்து கொள்கின்ற அந்தத் தாய்மார்கள் ஒரு சில நேரங்களிலே அது தோல்வியுற்று, ஒரு சில தாய்மார்கள் மீண்டும் குழந்தை பெறக் கூடிய வாய்ப்பு ஏற்படுகின்றது. குழந்தையே வேண்டாம் என்று அவர்கள் நிரந்தரமாக கருத்தடை செய்து கொள்கின்றார்கள். ஆனால் மீண்டும் அந்தக் குழந்தை பிறக்கும் போது அவர்கள் மிகவும் பாதிப்பிற்கு உள்ளாகிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சரவர்கள், மீண்டும் கருத்தடை செய்யும் போது ரூ. 100 கொடுக்கப்படும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளதாகச் சொன்னார்கள். அந்த 100 ரூபாய் போதாது. அந்த 100 ரூபாயை வைத்துக் கொண்டு, அந்த தாய்மார்கள் திருப்தி அடைய முடியாது. எனவே குழந்தையின் எதிர்கால வாழ்க்கையுடைய நலனைக் கருதியும், அந்தத் தாய்மார்களினுடைய உடல்நிலையைக் கருதியும், இன்னும் அதிகமான தொகையைக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாய்மார்கள் சில பேர் குழந்தைகள் வேண்டாம் என்று அறுவை சிகிச்சை செய்து கொள்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர்களைக் கொண்டு வந்து சேர்ப்பதற்காக அரசாங்கம் என்னவெல்லாம் கஷ்டப்படுகிறது என்பதை நாங்கள் தான் இப்போது நேராகப் பார்த்துக் கொண்டு இருக்கிறோம். இந்த அறுவை சிகிச்சையிலே ஒரு குறிப்பிட்ட சதவீதம் தோல்வியடைவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதிலே வாய்ப்பில்லை என்று நான் சொல்லிவிட முடியாது. எனவே அப்படி தோல்வியடைகிற போது மீண்டும் அவர்களுக்கு கருத்தடை செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஒரு வேளை அவர்கள் உரிய நேரத்திலே சொல்லாமல் விட்டு விட்டு மீண்டும் ஒரு குழந்தையை பெறுகின்ற வாய்ப்பு ஏற்படுகிற போது அவர்களுக்கு அரசிலே ஏற்கெனவே இருக்கின்ற வசதிகளைத் தான் செய்து கொடுக்கப்பட முடியுமே ஒழிய, நிச்சயமாக அதற்காக தனியாக அந்த நஷ்ட ஈடு கொடுப்பதற்கோ, அல்லது அந்தக் குழந்தையைப் பராமரிப்பதற்கோ, அப்படிப் பட்ட நடவடிக்கைகள் எடுப்பது இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் எங்கேயும் இல்லை. அதனால் இங்கேயும் தனிப் பட்ட முறையிலே நடைமுறைப்படுத்துவது என்பது கடினமான காரியம்.

1993 மார்ச் 31]

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை நான் கேட்கும்போது பாதிக்கப்பட்ட இரண்டு பெண்கள் என்னிடத்தில் வந்து கேட்டார்கள். அதற்காகத்தான் இந்தக் கேள்வியை நான் கேட்டேன். இதிலே ரோஷன் ஹபீபி என்ற ஒரு பெண் அரசு மருத்துவமனையிலே நிரந்தர கருத்தடை செய்துகொண்ட பிறகு, மீண்டும் குழந்தை பெற்று, அதுவும் அறுவைச் சிகிச்சை மூலமாகத்தான் குழந்தை பிறந்திருக்கிறது. அதன் அடிப்படையிலே அந்தப் பெண்மணியின் உடல்நிலை பாதிக்கப்பட்டு, ஹெர்னியா அறுவை சிகிச்சை செய்து, வலுவிழந்து காணப்படுகின்ற அந்த ஒரு சில தாய்மார்களுக்காவது—உண்மையிலேயே பாதிக்கப்பட்ட அந்த ஒரு சில தாய்மார்களுக்காவது அரசு தனிக் கவனம் செலுத்தி, அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–15.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருத்தடை செய்கின்றபோதே அவர்களிடமிருந்து ஒரு கையெழுத்து வாங்கப்படுகிறது. அதிலே அவர்கள் எழுதிக் கொடுக்கிறார்கள். கருத்தடை அறுவை சிகிச்சை தோல்வியடைய வாய்ப்பு உண்டு என்பதை நான் அறிவேன் என்று அவர்கள் எழுதிக் கொடுக்கிறார்கள். அதற்குப் பின்னாலே அதற்காக அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவரை நானோ என் உறவினர்களோ காரணம் கற்பிக்க இயலாது என்பதையும் அறிவேன் என்றெல்லாம் எழுதிக் கையெழுத்து போட்டுக் கொடுத்துவிட்டுத்தான் அவர்கள் அறுவைச் சிகிச்சையில் பங்கு பெறுகிறார்கள். இப்போது நமக்கிருக்கிற பிரச்சினையே இது போன்ற தவறுகளோ அல்லது பெயிலியரோ ஏற்படுகிற போது அதற்காக அரசாங்கம் பொறுப்பேற்று செய்ய முடியாது. அப்படி பெயிலியர் ஏற்படுகிற போது அவர்கள் கருவுறுகிற போதே அவர்களுக்குத் தெரிந்து விடும். உடனேயே அந்த உரிய மருத்துவமனைக்கோ அல்லது அரசு மருத்துவமனைக்கோ வந்துவிட்டால், அவர்களுக்கு உரிய நடவடிக்கை எடுத்து விடலாம். அவர்கள் அதற்குப் பின்னாலே குழந்தை பிறக்கிறவரை காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. எனவே, அவர்களுக்கும் விருப்பம் இருந்த காரணத்தால் அவர்கள் காத்திருந்திருக்கிறார்கள் என்று கூட நான் கருதுகிறேன். எனவே கருவுற்ற உடனேயே அரசாங்க மருத்துவமனைக்கு தெரிவித்திருந்தால், அதற்கு உரிய நடவடிக்கையை அரசு மருத்துவமனையில் எடுத்துவிட்டுப் போயிருப்பார்கள். எனவே, அவர்கள் 10 மாத காலம் பொருத்திருந்து அதற்குப் பின்னால் அவர்கள் குழந்தை பெற்றுக்கொண்டு பின்னர் அரசாங்க உதவி கேட்பது அவ்வளவு பொருத்தமாக இருக்காது. அப்படிச் செய்ய முடியாது. மத்திய அரசாங்கத்திலேயும் நாம் அதற்கான நிதியை பெறமுடியாது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[1993 மார்ச் 31

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜெ. பாலகங்காதரன்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிரந்தர கருத்தடை செய்யும்போது, அந்த கருத்தடை தோல்வியுற்ற பிறகு, குழந்தை பெற்றவர்கள் அந்த அரசாங்க மருத்துவர்களை குறை சொல்லி கன்சியூமர் கௌன்சிலுக்குச் சென்று வழக்குத் தொடுக்கிறார்கள். இதனால் அவர்களுக்கு ஏகப்பட்ட இழப்பு ஏற்படுகிறது. இதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? மேலும் ஆண்களுக்கும் கருத்தடை தோல்வியுற்றால் இந்த உதவி செய்ய அரசாங்கம் முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கன்சியூமர் கோர்ட்டுக்குப் போவதை பொறுத்தவரை நாம் ஏற்கனவே அவர்களிடத்தில் எழுதி வாங்கியிருக்கின்ற காரணத்தால் நீதிமன்றத்திலே இதை புரொடியூஸ் செய்து நமக்குச் சாதகமாகப் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று நான் கருதுகிறேன். அதை சட்டரீதியாக தடுக்க முடியுமா என்பதைப் பற்றித் தனியாக ஆய்வு செய்ய வேண்டும். ஆண்களுக்கும் இந்த வசதி செய்து கொடுக்க முடியுமா, பெயிலியர் ஆனால் அதற்குண்டான நஷ்டஈடு கொடுக்கப்படுமா என்று கேட்டார்கள். அதைப்பற்றி ஒன்றும் குறிப்பு என்னிடத்தில் இப்போது இல்லை. அது கொஞ்சம் கண்டுபிடிப்பது சிரமமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். பெயிலியரா அல்லது வெற்றிகரமாக இருக்கிறதா என்பதை கண்டுபிடிப்பது கொஞ்சம் சிரமம். அதை இங்கே அலசி ஆராய்வது கூட அவ்வளவு பொருத்தமாக இருக்காது என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் சு. மணிமேகலை.

டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மக்களிடத்தில் இந்த கருத்தடை ஆப்பரேசன்ஸ் பெயிலியர் ஆனால் அது டாக்டரோட ஃபால்ட் என்று கருதுகிறார்கள். ஆனால் அதற்கு வேறு சில காரணங்களும் இருக்கின்றன. அதாவது அப்டாமன் திறந்ததற்குப் பிறகு பிற்பாடு தான் தெரியும். வேறு சில சர்ஜிகல் கண்டிஷன்ஸ்களுக்கு அந்த பேஷன்ட்ஸ் உள்ளாக்கப்படுகிறார்கள். அதாவது அடிஹஷன்ஸ், ட்யூமர்ஸ் இந்த மாதிரி கண்டிஷன்ஸ் இருப்பதால் அந்த ஆப்பரேஷன் கேஸஸ் பெயிலியர் ஆகிறது. இதற்காக தான் மக்களிடம் டாக்டர்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியதுபோல அட்வான்ஸாக கையெழுத்து வாங்கிக்கொள்கிறார்கள். இருந்தாலும் மக்களிடையே பொதுவான கருத்து மருத்துவர்களைப் பற்றி தவறான கருத்து ஏற்பட்டு கன்சியூமர்

1993 மார்ச் 31]

கௌன்சில் போன்ற கௌன்சிலுக்கு எல்லாம் போகிறார்கள். ஆகவே, இதை நிரந்தரமாக தடை செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன விளக்கங்கள் அவ்வளவையும் கோர்ட்டிலே சொன்னால் நமக்குச் சாதகமாகப் போய்விட்டுப் போகிறது. எனவே அவர்கள் போவதைத் தடுக்கிறோம் என்று சொன்னால் ஏதோ அரசாங்கம் பெரிய பாதகம் ஏற்படுத்துவதாக எண்ணக்கூடும். இருந்தாலும் தனிப்பட்ட முறையிலே ஏற்கனவே பாலகங்காதரன் அவர்கள் கேட்டதற்கு நான் சொன்னேன், சட்ட ரீதியாக இதை ஆய்வு செய்து இதை கோர்ட்டுக்குப் போகாமல் தடுக்க முடியுமா, தடுப்பதால் வேறு பிரச்சினைகள் வருமா என்பதை ஆய்வுசெய்து பின்பு தான் முடிவு எடுக்க முடியுமே ஒழிய இப்போது முடிவு எடுத்தால் பொது மக்களுக்கு இருக்கின்ற உரிமையை நாம் ஏதோ ஒன்றும் யோசிக்காமல் பறித்துவிட்டதாகக் கருதக் கூடும் என்ற காரணத்தால், அதைப்பற்றி ஆலோசித்துபின்னாலே நடவடிக்கை எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. பெரியசாமி.

திரு. வே. பெரியசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் ஊரில் ஒரு அம்மையார் இதே போன்று இரண்டு குழந்தைகளைப் பெற்றுவிட்டார்கள். அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு குழந்தைகளைப் படிக்க வைக்க முடியாத ஒரு சூழ்நிலையில் இருக்கிறார்கள். நல்ல முறையிலே அவர்கள் கருத்தடை செய்திருந்தாலும்—இம்மாதிரி 100—க்கு ஒன்றிரண்டு கேஸ்கள் இப்படி போய்விடுகிறது. ஆகையினால் கருணை உள்ளம் கொண்ட இதயதெய்வம் நாங்கள் எல்லாம் கடவுளாக வணங்கிக் கொண்டிருக்கின்ற ஒப்பற்ற தெய்வத்தினுடைய ஆட்சியில் அப்படிப்பட்ட ஒன்றிரண்டு குடும்பங்களுக்காவது, கலப்புத் திருமணம் செய்து கொண்டிருக்கின்ற தம்பதிகளுக்கு அரசாங்கத்திலே பல்வேறு வகையான விருதுகளை வழங்குவது போன்று இந்தக் குடும்பங்களுக்கு வழங்கி, கல்வி மற்றும் பல்வேறு வகையான விதங்களில் மேம்பாடு அடைவதற்கு வாய்ப்பினை உருவாக்கிக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பெரியசாமி. இது கருத்தடை செய்ததற்குப் பிறகு, அது தோல்வியுற்று குழந்தை பெறுவது, நீங்கள் இரண்டு குழந்தை பெற்றவரைப் பற்றிச் சொல்கிறீர்கள். ஏற்கனவே ஒரு குழந்தை பெற்றிருந்தால் தோல்வி. இரண்டாவது குழந்தை என்கிறபோது அவர்களுடைய முயற்சி. (சிரிப்பு).

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் அவர்கள் சொன்ன மாதிரி தோல்வியுற்ற பின்னாலே ஒரே குழந்தையோடு அவர்கள் கண்டுபிடித்து அதை நிறுத்தி இருக்க வேண்டும். என்னுடைய வாதம் அந்த ஒரு குழந்தை கூட கருவுற்றவுடனேயே அவர்களுக்குத் தெரிந்திருக்கும். எனவே, அவர்கள் உடனே அரசாங்க மருத்துவமனையை அணுகியிருக்க வேண்டும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் பார்த்தால் நிதானமாக இரண்டு ஆண்டுக்காலம் இருந்து இரண்டு குழந்தைகளைப் பெற்றெடுத்த பின்னாலே அவர்கள் இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர் நமக்காக இருக்கிறார்; அவர் எப்படியும் வாதாடி உதவிகளை பெற்றுத் தருவார் என்ற நம்பிக்கையிலே இரண்டு குழந்தைகளைத் தோல்வியுற்ற பின்னாலே அவர்கள் பெற்றுக் கொண்டதாகத் தெரிகிறது. இது மிகப் பெரிய ஒரு அநியாயமான காரியம் என்று நான் கருதுகிறேன். இப்படி ஒரு வசதியை நாம் செய்து கொடுத்து விட்டால் மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியசாமி போன்றவர்கள் வாதாடி நமக்குப் பெற்று தருவதற்கு இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தி விட்டால் பல பேர் இதுபோன்ற முயற்சியில் இறங்கி விடுவார்கள் என்ற காரணத்தால் இதை இப்போது ஏற்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்த கருத்தடை தோல்வி பெறுவது என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது மீண்டும் குழந்தை பிறப்பது என்று அதில் நடக்கின்ற தவறுகளை சுட்டிக்காட்டினார்கள். ஆண்களுக்கு கருத்தடை செய்து அதன் மூலமாக பெண்களுக்கு குழந்தை உண்டானால் வாழ்க்கையே விவாக ரத்து ஆகிறது. மனைவி மீது சந்தேகம் வருகிறது. ஆகவே, முழுமையாக மருத்துவர்களுடைய ஆலோசனையைப் பெற்று அப்படி தவறுகள் நடைபெறாமல் இருக்க அரசு முயற்சி எடுக்குமா? அதற்கான உத்தரவாதத்தை ஏற்றுக்கொள்வார்களா? பலயிடங்களில் இப்படி குடும்பத்தில் விவாக ரத்து ஏற்படக்கூடிய சூழ்நிலையில் கணவனுக்கு மனைவியின் மீது சந்தேகம் ஏற்படக்கூடிய சூழ்நிலை கூட உருவாகிறது. ஆகவே, இதன் மீது உரிய நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னது மிக முக்கியமான பிரச்சினை. ஏற்கனவே இப்படிப்பட்ட பிரச்சினை

1993 மார்ச் 31]

பலமுறை விரிவாகப் பேசப்பட்டிருக்கிறது. அதிலே அரசாங்கம் தனிக் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்து ஆக வேண்டும். குறிப்பாக இப்படிப்பட்ட நிலைமை ஏற்படுகிறபோது மருத்துவர்களை அணுகி அந்த ஆண்கள் தங்களுடைய நிலை எப்படி இருக்கிறது என்பதைப் பற்றி அவர்கள் ஆலோசனை பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தை தனிப்பட்ட முறையில் ஆய்வு செய்து வேறு ஏதாவது அதற்கு வழிமுறையை கண்டுபிடிக்க முடியுமா என்று ஆய்வு செய்யலாம். எனவேதான் பெண்கள் அறுவை சிகிச்சை செய்து கொள்வதை நாம் இப்போது அதிகமாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று நாம் வலியுறுத்தி வருகிறோம். எனவே, அதைப்பற்றி தனியாக இது மிகவும் சென்சிட்டிவ் மேட்டர் என்ற காரணத்தால், தனியாக அதைப்பற்றி ஆய்வு செய்து முடிவு எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் மு. சீனியம்மாள்.

டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குடும்ப நலத் திட்டம் என்பது அரசாங்கம் அனைவருக்கும் ஏற்பாடு செய்கிற ஒரு திட்டம். இது மாவட்ட ஆட்சித் தலைவர் முதற்கொண்டு அங்கே இருக்கிற தலைமை மருத்துவர்கள், தலைமை மருத்துவமனையிலிருந்து டாக்டர்கள் டெப்யூட் செய்து அதை செய்கிறார்கள். எனவே கேம்ப் என்று சொல்லுகிறபோது அங்கே நூற்றுக்கு மேற்பட்ட தாய்மார்கள் வந்து செய்து கொள்கிறார்கள். திருமணம் ஆகி 2 குழந்தைகள் பிறந்ததற்குப் பிறகு மாதவிடாய் காலங்களில் 30 நாட்களிலிருந்து 60 நாட்களில் அவர்கள் பிரக்னன்ட் ஆகிறார்கள். அது டெஸ்டு செய்யும்போது 30 நாட்களுக்குள் தெரிவது இல்லை. அவர்களும் அம்மாதிரி வந்து சொல்லாத காரணத்தால் அது கண்டுபிடிக்கப்படாமலேயே ஆபரேஷனுக்குப் பிறகு பிரக்னன்ட் ஆகிற ஒரு வாய்ப்பு ஏற்பட்டு விடுகிறது. எனவே அரசு சொல்லுகிற வேலையை தலைமேற்கொண்டு செய்கின்ற அந்த மருத்துவர்கள் மேல் குற்றம் சுமத்தி கன்ஸ்யூமர் கோர்ட்டுக்கு போவதை நமது அமைச்சர் அவர்கள் அறிந்து இதை மக்களுக்கு எடுத்துச் சொல்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவர்கள் மீது எனக்கும் இப்படிப்பட்ட அனுதாபம் இருக்கிறது. எனவே, அவர்கள் செய்யாத தவறுக்கு மாட்டிக் கொள்ளக் கூடாது, தவறு செய்தால் மாட்டியே ஆக வேண்டும். எனவே, அது இரண்டும் இருக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். ஆனால் இப்போது ஏற்கனவே சொன்ன பதில் பொது மக்களுக்கு இதிலே ஒரு சந்தேகம் வந்து விடக் கூடாது என்ற காரணத்தால் தான் இதைப் பற்றி

கொஞ்சம் ஆழமாக யோசித்து அவர்களுக்கு இருக்கின்ற உரிமைகளை நாம் ஏதோ தட்டிப் பறித்து விட்டோம் என்ற உணர்வு வந்து விடக் கூடாது என்ற காரணத்தால்தான் சட்டத் துறையுடன் இதைப் பற்றி பேசி அதற்குப் பின்னர் ஒரு முடிவு எடுக்கலாம் என்ற கருத்தை நான் ஏற்கனவே தெரிவித்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்விக்கு ஏராளமான கைகள் தூக்கப்படுகின்றன. எல்லோருக்கும் அனுமதி தந்தால் இந்த ஒரு கேள்விதான் போகும். எனவே, வினா எண். 185, திரு. கு. லாரன்ஸ், மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர்.

185—

கேரள வாடகைக் கார்கள் தமிழகம் வரும்போது கட்டுப்பாடு கள் விதித்தல்.

*10747—திரு. கு. லாரன்ஸ் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) தமிழக வாடகைக் கார்கள் கேரள மாநிலம் செல்ல கடுமையான கட்டுப்பாடுகளைக் கேரள அரசு விதித்திருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) கேரள வாடகைக் கார்கள் தமிழகம் வரும்போது அதே மாதிரி கட்டுப்பாடுகள் விதிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இது குறித்து பொதுமக்களிடமிருந்தோ அல்லது வாடகைக் கார் உரிமையாளர்களிடமிருந்தோ அல்லது சென்னை போக்குவரத்துத் துறை ஆணையரிடமிருந்தோ புகார் ஏதும் இதுவரை அரசுக்கு வரவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து சென்ற சட்டமன்றப் கூட்டத் தொடரில் எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்திலிருந்து புதிய கார்களுக்கு சென்ற ஒரு ஆண்டு காலமாக டூரிஸ்டு டாக்சியாக பர்மிட் கேட்கிறபோது கேரளாவுக்குச் செல்ல பர்மிட் வழங்குவது இல்லை, குறிப்பாக தமிழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு. கேரளாவைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே டூரிஸ்டு பர்மிட் கொடுக்கிறார்கள். இரண்டாவது, நம்முடைய